ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2274/38 - 2022 අප්‍රේල් මස 08 වැනි සිකුරාදා - 2022.04.08
*2274/38 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

***1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்***

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணாயக்கார ஆகிய நான், குறித்த சபைக்கு, ஓபநாயக நீர் வழங்கல் செயற்திட்டத்தின் நீர் சுத்திகரிப்பு நிலையத்தை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதியொன்றினை சுவீகரித்துக்கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக் கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.*

**வாசுதேவ நாணாயக்கார,**
*நீர் வழங்கல் அமைச்சர்.*

தொடர்பு இல. : DVP/ 02/ 04/ RN/ 502.
நீர் வழங்கல் அமைச்சு,
இலக்கம் 35,
"லக்திய மெதுர",
புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2022, மாச்சு 25.


*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

*இரத்தினபுரி மாவட்டத்தில், ஓபநாயக பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 244 வடக்கு ஹுனுவல பிரிவில், 5 ஆம் இலக்க பகுதி, நவ கம்மானய கிராமத்தில் அமைந்துள்ள ஹுனுவல வத்த இலக்கம் 5 பகுதி என்றழைக்கப்படுகின்ற காணியிலிருந்து 01 ஏக்கர் 80 பேர்ச் விஸ்தீரனத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.*

வடக்கு : கைவிடப்பட்ட பழைய இறப்பர்;
கிழக்கு : கைவிடப்பட்ட பழைய இறப்பர்;
தெற்கு : கைவிடப்பட்ட பழைய இறப்பர்;
மேற்கு : கைவிடப்பட்ட பழைய இறப்பர்.

*காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் :* கஹவத்த பெருந்தோட்ட நிறுவனம்.

EOG *04 - 0057*

---

### *1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்*

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணாயக்கார ஆகிய நான், குறித்த சபைக்கு, கலவான நீர் வழங்கல் செயற்திட்டத்தின் நீர் உள்வாங்கு கிணற்றினை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதியொன்றினை சுவீகரித்துக்கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக்கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.*

**வாசுதேவ நாணாயக்கார,**
*நீர் வழங்கல் அமைச்சர்.*

தொடர்பு இல. : DVP/ *02/ 04/* RN/ *503.*
*நீர் வழங்கல் அமைச்சு,*
*இலக்கம் 35,*
*"லக்திய மெதுர",*
*புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2022, மாச்சு 25.*

**அட்டவணை**

*இரத்தினபுரி மாவட்டத்தில், கலவான பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 197/*B, *கொஸ்வத்த பிரிவில் வரதெல்கொட தெற்கு கிராமத்தில் அமைந்துள்ள கொஸ்வத்த கங்கை காப்பு என்றழைக்கப்படுகின்ற காணியிலிருந்து 40 பேர்ச் விஸ்தீரனத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.*

வடக்கு : துண்டு இலக்கம் 119 இன் ஒரு பகுதி ;
கிழக்கு : துண்டு இலக்கம் 120 இன் ஒரு பகுதி ;
தெற்கு : கொஸ்வத்த கங்கை ;
மேற்கு : துண்டு இலக்கம் 120 இன் ஒரு பகுதி.

*காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் :* கண்டறிய முடியவில்லை.

EOG *04 - 0058*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*